தலைமைச் செயலகத்தில்,நேற்று (16.05.2023) நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களை இந்தியாவிற்கான சிங்கப்பூர் நாட்டுத் தூதர் எட்கர் பாங் (Mr.Edgar Pang) சந்தித்து பேசினார். இச் சந்திப்பின் போது, சென்னையிலுள்ள சிங்கப்பூர் தூதரகத்தின் துணைத் தூதர் பசில் டிங் (Mr.Basil Ting) அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/ கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஆர்.கிர்லோஷ் குமார், நகராட்சி நிர்வாகத் தறை இயக்குநர் பா.பொன்னையா மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் மற்றும் ஒன்றிய பெருந்தலைவர்களுக்கு அரசின் சார்பில் வாகனங்களை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார்.

கிளாம்பாக்கம் புதிய பேருந்து நிலைய முனையத்தில்

போக்குவரத்து நெரிசலின்றி பேருந்துகளை இயக்க ஆலோசனை!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்றார்!

சென்னை, மே 17 - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நேற்று முன்தினம் (15-5-2023) செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் அமைக் கப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையத்தி லிருந்து, ஜி.எஸ்.டி. சாலை வழியாக போக்குவரத்து நெரிசலின்றி பேருந்துகளை இயக்குவது தொடர்பாகவும், தென் மாவட்ட பேருந்துகள் செல்ல மாற்று வழித்தடங்கள் அமைப்பது தொடர்பாகவும் சென்னைப் பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் காவல்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் போக்குவரத்துத் துறையுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், சென்னை வெளிவட்ட சாலை, வரதராஜபுரத்தில் தனியார் ஆம்னி பேருந்துகள் நிறுத்துவதற்கான இடத்தினை (Omni Bus Idle Parking) நேரில் சென்று கள ஆய்வு மேற் கொண்டார்.

அதுபோது அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்த தாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையம் “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்” எனும் பெயரில் மக்கள் பயன்பாட்டிற்காக வருகின்ற ஜூன் மாதம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படும்.

கிளாம்பாக்கம் புதிய புறநகர் பேருந்து முனையத்தின் முடிவுற்றப் பணிகள் தொடர்பாக 15-5-2023 அன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், இம் முனையத்திலிருந்து ஜி.எஸ்.டி. சாலை வழியாக போக்குவரத்து நெரிசலின்றி பேருந்துகளை இயக்குவது தொடர்பாகவும், தென்மாவட்ட பேருந்துகள் செல்ல மாற்று வழித் தடங்கள் அமைப்பது தொடர்பாகவும் தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் அவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கூடுவாஞ்சேரியில் ரவுண்டானா அமைப்பது தொடர்பாகவும், கூடுவாஞ்சேரி, மாடம்பாக்கம் சாலை முதல் மண்ணிவாக்கம் வரை 7 கிலோ மீட்டர் நீளத்திற்கும், கண்டிகை முதல் கூடுவாஞ்சேரி வரை 18 கிலோ மீட்டர் நீளத்திற்கும், நல்லம்பாக்கம் முதல் ஊரப்பாக்கம் ஜிஎஸ்டி சாலை வரை 10 கிலோ மீட்டர் நீளத்திற்கும் சாலைகளை அகலப்படுத்துவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், சென்னை வெளிவட்ட சாலை, வரதராஜபுரத்தில் அமையுள்ள தனியார் ஆம்னி பேருந்துகள் நிறுத்துமிடம் (Omni Bus Idle Parking) இடம் தேர்வு செய்வதற்காக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் முனைவர் அ.அமல்ராஜ், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, போக்குவரத்து ஆணையர் இல.நிர்மல்ராஜ், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ராகுல் நாத், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வரலட்சுமி மதுசூதனன் தாம்பரம் மாநகர காவல் கூடுதல் ஆணையாளர் (போக்குவரத்து) ந. காமினி, காவல் இணை ஆணையாளர் முனைவர். பா.மூர்த்தி, காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் உதயா கருணாகரன், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள், காவல்துறை, வருவாய்துறை, நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 70 ஆண்டுகால பொதுவாழ்வு புகைப்படக் கண்காட்சியை, வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் தலைமையில், கழக மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் முன்னிலையில், பொதுமக்கள், கல்லூரி, பள்ளி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் 1500க்கும் மேற்பட்டோர் பார்வையிட்டனர். உடன் ஆர். சிவானந்தம், வ.அன்பழகன், எஸ்.அம்பேத்குமார் எம்.எல்.ஏ, கே.வி.ராஜ்குமார், க.லோகநாதன், தட்சணாமூர்த்தி, ஆர்.நந்தகோபால், வெள்ளைகணேசன், வேணி.ஏழுமலை உட்பட பலர் உள்ளனர்.

திருவண்ணாமலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் புகைப்படக் கண்காட்சி

ஆரணி, செய்யாறு, வந்தவாசி, போளூர் மக்கள் பார்வையிட்டனர்!

வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் தலைமையில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

திருவண்ணாமலை, மே 17 - திருவண்ணாமலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 70 ஆண்டுகால பொதுவாழ்வு புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. புகைப்படக் கண்காட்சியை, ஆரணி, செய்யாறு, வந்தவாசி, போளூர் பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் தலைமையில் பார்வையிட்டு ரசித்தனர்.

16.05.2023 செவ்வாய்க் கிழமை காலை 10.30 மணியளவில் திருவண்ணாமலையில், காந்திநகரில் அமைக்கப்பட்டுள்ள, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 70 ஆண்டுகால பொதுவாழ்வு புகைப்படக் கண்காட்சியை, வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் தலைமையில், கழக மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் முன்னிலையில், ஆரணி, செய்யாறு, வந்தவாசி, போளூர் பொதுமக்கள், கல்லூரி, பள்ளி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் 1500க்கும் மேற்பட்டோர், ஆர்வத்துடன் பார்வையிட்டு கண்டு ரசித்து, அலைபேசியில் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினின் 70வது பிறந்தநாளை முன்னிட்டு, அவரது பொது வாழ்வு பயண புகைப்படக் கண்காட்சி சென்னையில் தொடங்கி பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்படுகிறது. அதன்படி திருவண்ணாமலை காந்திநகர் பைபாஸ் சாலை மைதானத்தில் குளிர்சாதன வசதியுடன் கூடிய பிரமாண்ட அரங்கத்தில் தொடங்கப்பட்டு, இதுவரை சுமார் 40ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் மாணவர்கள், இளைஞர்கள் பார்வையிட்டுள்ளனர்.

புகைப்படக் கண்காட்சிக்கு தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர்.சிவானந்தம், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் வ.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.வி.ராஜ்குமார், மாவட்ட நிர்வாகிகள் க.லோகநாதன், தட்சணாமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.நந்தகோபால், வெள்ளைகணேசன், பேரூராட்சி தலைவர் வேணி.ஏழுமலை உட்பட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பாலக்கோடு அருகே 75 ஆண்டுகளுக்கு பிறகு

மலை கிராம சாலை பணிக்கு ஒன்றிய அரசு அனுமதி!

செந்தில்குமார் எம்.பி. தகவல்!

தர்மபுரி, மே 17 - தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு அருகே வட்டுவனஅள்ளி ஊராட்சியில் உள்ள கோட்டூர் மலை கிராமத்தில் சுமார் 200க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

முதியவர்கள், கர்ப்பிணி பெண்கள், உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களை போதிய சாலை வசதி இல்லாததால் தொட்டில் கட்டி 4 கி.மீட்டர் தூரம் நடந்தே தூக்கி சென்று மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் அவல நிலை இருந்து வருகிறது கடந்த 75 ஆண்டுகளாக அங்கு சாலை வசதி ஏற்படுத்தப்படவில்லை.

தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில்குமார், தீவிர முயற்சி மேற்கொண்டு ஒன்றிய வனத்துறை, சுற்றுசூழல் துறை, பசுமை தீர்ப்பாயம் உள்ளிட்ட 6 துறைகளின் அனுமதி பெற்று மலை அடிவாரத்தில் இருந்து கோட்டூர் மலைமுகடு வரை சுமார் 4.கிலோ மீட்டர் தூரம் அகன்ற சாலை அமைக்க ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து கோட்டூர் மலை கிராம மக்களை சந்தித்து அனுமதி கிடைத்த விவரத்தையும் விரைவில் சாலை அமைக்கும் பணி தொடங்கப்படும் என தெரிவித்தார்.

முன்னதாக கிராம மக்கள் நன்றி தெரிவிக்கும் வகையில் மேளதாளம் முழங்க பூர்னகும்ப மரியாதை அளித்து நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சிக்கு வட்டு வன ஊராட்சி மன்ற தலைவர் மாதம்மாள் கோவிந்தசாமி தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் முருகன், ஒன்றிய செயலாளர்கள் முனியப்பன், மடம் முருகேசன், சபரி, மேற்கு மாவட்ட இளைஞர் அணி மகேஷ்குமார், கவுன்சிலர்கள் முத்துசாமி மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்தகோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முத ல்கழக உறுப்பினராகச் செயல்படஅனுமதிக்கப்பட்டுள்ளார்.

“அண்ணா அறிவாலயம்” சென்னை - 600 018. நாள் : 16-5-2023

துரைமுருகன் பொதுச் செயலாளர் தி.மு.க.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் மீனவர் தெருவைச் சேர்ந்தவர் அல்லிமுத்து மகன் பாலகிருஷ்ணன் ஏரியில் அதிக தண்ணீர் தேங்கி இருந்ததால் வலை கட்டும் போது சிக்கி மாயமானார். மறுநாள் சின்னசேலம் தீயணைப்பு மற்றும் மீட்பு குழு நிலைய அலுவலர் பரமசிவம் உள்ளிட்ட குழுவினர் ஏரியில் பாலகிருஷ்ணன் சடலத்தை மீட்டனர். இந்நிலையில் ஏரியில் மீன் பிடிக்கச் சென்று இறந்து போன வாலிபரின் குடும்பத்தினரை சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ நேற்று சின்னசேலம் ஒன்றியக் குழு துணைத் தலைவர் வி.வி.அன்புமணி மாறன் ஆகியோர் நேரில் சென்று ஆறுதல் கூறி ரூ.50,000 நிதியுதவி வழங்கினர். அதுபோது நகரச் செயலாளர் கே.எம். செந்தில்குமார், மாவட்டப் பிரதிநிதி முருகேசன் மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர்கள் கோம்பையன், மண்மலை எம்.பி.அருள், நிர்வாகிகள் ரவி, அய்யாசாமி, ராமசாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அறிவிப்புகள் - செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டம்!

அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தலைமை!

சென்னை, மே 17 - சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டில் மிகவும் அக்கறை உள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நேற்று முன்தினம் (15.05.2023) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகள் மற்றும் அவற்றின் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டம் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகள் குறித்து அமைச்சர் அவர்களால் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அரசாணை வெளிடப்பட்ட அறிவிப்புகளுக்கு முழு செயல் வடிவம் கொடுத்து இத்திட்டங்களின் பயன் மக்களை விரைந்து சென்றிடுவதை உறுதி செய்திடுமாறும், அரசாணை வெளியிடப்பட வேண்டிய அறிவிப்புகளுக்கு உரிய கருத்துருக்களை அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்குமாறும் அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குநர் கே.எஸ்.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ். அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மெக்சிகோவில் சாலை விபத்தில் 26 பேர் பலி!

மெக்சிகோ,மே.16- மெக்சிகோவில் வேனும் டிரக்கின் டிரெய்லரும் மோதியதில் 26 பேர் பலியானார்கள். மெக்சிகோவின் சியுடாட் விக்டோரியா நெடுஞ்சாலையில் வேனும் டிரக்கின் டிரெய்லரும் மோதி விபத்துக்குள்ளானது. இதில் மோதிய வேகத்தில் இரண்டு வாகனங்களும் தீப்பிடித்து எரிந்தது.

இந்த சம்பவத்தில் 26 பேர் பலியானார்கள். நிகழ்விடத்துக்கு விரைந்த காவல்துறையினர் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். சம்பவ இடத்தில் இருந்து தேசிய அடையாள அட்டைகள் மீட்கப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் மெக்சிகோவை சேர்ந்தவர்கள் என கருதப்படுகிறது. விபத்தைத் தொடர்ந்து டிரெய்லரை ஏற்றிச் சென்ற டிரக் அந்த இடத்தில் இல்லை.

டிரக்கின் ஓட்டுநர் தப்பியோடினாரா அல்லது விபத்தில் அவரும் பலியானாரா என்பது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தி.மு.க. இலக்கிய அணி நிர்வாகிகள் கூட்டம்!

வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

கழக இலக்கிய அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டம், வருகின்ற 19.05.2023 வெள்ளிக்கிழமை அன்று கலைஞர் அரங்கம் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ளது. இதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாக நடத்துவது தொடர்பாகவும், இலக்கிய அணி சிறப்பாக செயல்படுவது தொடர்பாக ஆலோசனையும் நடைபெற உள்ளது. ஆகையால் மாநில நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

வி.பி.கலைராஜன்
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி

தமிழ்நாடு அரசு
வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி

ந.க.எண். 1549 / 2022 / அ1 — **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** — நாள்.05.05.2023

சேலம் மாவட்டம், வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சியில் 2022-2023 ஆம் ஆண்டு மூலதன மானிய நிதித் (CGF) திட்டத்தில் கீழ்காணும் விபரப்படியான பணியினை மேற்கொள்ள வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி நிர்வாக அதிகாரி அவர்களால் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 2023-ம் வருடம் மே மாதம் 24 ஆம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒப்பந்தபுள்ளிகள் மின்னணு (E Submission) மூலம் பெற்றுக் கொள்ளப்படும். மேலும், ஒப்பந்தபுள்ளி இருப்பு விபரத்தினை https://tntenders.gov.in மற்றும் http://tenders.tn.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி பற்றிய விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் அலுவலக வேலை நாட்களில், வேலை நேரங்களில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மின்னணு (E Submission) மூலம் அனுப்ப வேண்டிய கடைசி நாள், நேரம், இடம்	23.05.2023 ஆம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை, வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி. (அலுவலக விடுமுறை நாட்கள் எனில் அடுத்த வேலை நாட்களில் பெறப்படும்)
மின்னணு (E Submission) மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள், நேரம், இடம்	24.05.2023 ஆம் தேதி பிற்பகல் 3.30 மணி, வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி.

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீடு ரூ.	முன்வைப்புத் தொகை ரூ.
1.	வாழப்பாடி பேரூராட்சி, 6வது வார்டு, மன்னாய்க்கன்பட்டி ரோடு முதல் கடலூர் மெயின் ரோடு வரை வடிகாலுடன் கூடிய தார்சாலை, மாருதி நகர் குறுக்குத்தெருக்கள் மற்றும் பெரியசாமி நகர் பகுதிகளில் தார்சாலை அமைத்தல்	1,17,00,000	2,34,000

தலைவர், வாழப்பாடி பேரூராட்சி, சேலம் மாவட்டம்.

செ.ம.தொ.கி./2586/ ஒப்பந்தப்புள்ளி / 2023

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

செயல் அலுவலர், தேர்வுநிலை பேரூராட்சி வாழப்பாடி - 636 115, சேலம் மாவட்டம்.

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு அருகே கோட்டூர் மலை கிராமத்திற்கு சாலை அமைக்க ஒன்றிய அரசு அனுமதி அளித்ததையடுத்து மலைவாழ் மக்கள் நடத்திய பாராட்டு விழாவில் டாக்டர் செந்தில்குமார் எம்.பி. பங்கேற்றார்.